**கவனிக்க.**- *08.02.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1798 - 2013 පෙබරවාරි මස 15 වැනි සිකුරාදා - 2013.02.15

*1798 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 438 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | 438 | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, மாச்சு மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண சபை**

*1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ள 1946 ஆம் ஆண்டின்12 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள பொழுதுபோக்கு அலுவல்களுக்காக அறவிடப்படும் உட்பிரவேசிக்கும் கட்டணத்தில் 10% ஐ, பொழுதுபோக்கு வரியாக விதிக்கப்பட்டு அறவிடுவதற்கும், 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டத்தின் 2(1) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கொழும்பு மாநகர சபையினால் 2012.10.25 ஆந் திகதி உடன்பாடு காணப்பட்டுள்ள ஆலோசனையை மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சரும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாகம், மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனிதவலு, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொழுதுபோக்கு கட்டளைச் சட்டத்தின் 2(2) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் அங்கீகரிக்கின்றேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டம்
மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிருவாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும்
வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

மேல் மாகாண மாகாண சபை,
ஸ்ரீமத் மாக்கஸ் பெர்னாந்து மாவத்தை,
சிராவஸ்தி மந்திரய,
கொழும்பு 07.
2013, சனவரி 28.

2-482

# பதவிகள் - வெற்றிடம்

**ஆளுநர் அலுவலகம் - சப்பிரகமுவ மாகாணம்**

சப்பிரகமுவ மாகாண சபையின் நாடளாவிய சேவை வெற்றிடம்

வெற்றிடமாகவுள்ள சப்பிரகமுவ மாகாண சபையின் ஆளுநரின் செயலாளர் பதவிக்காக, இலங்கை நிருவாக சேவையில் விசேட தரத்தினையுடைய உத்தியோகத்தரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விசேட தரத்தினையுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாவிடின், முதலாம் வகுப்பு உத்தியோகத்தர்களினது விண்ணப்பங்களும் கவனத்தில் கொள்ளப்படுவதனால், முதலாம் வகுப்பினையுடைய உத்தியோகத்தர்களும் இதற்காக விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

**ஆட்சேர்ப்பு** :

இந்த அழைப்புக்கு ஏற்ப கிடைக்கின்ற விண்ணப்பங்கள் கௌரவ ஆளுநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. ஆளுநரின் செயலாளர் பதவிக்காக தகுதி வாய்ந்த உத்தியோகத்தரை தெரிவு செய்வது கௌரவ ஆளுநர் அவர்களின் முழுமையான தற்றுணிவின் படி நடைபெறும்.

ஆளுநரின் செயலாளர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவது தொடர்பான இறுதி முடிவு கௌரவ ஆளுநர் அவர்களின் முடிவாகும்.

**விண்ணப்பங்களை அனுப்புதல்** :

கௌரவ ஆளுநர் அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக குறித்த உத்தியோகத்தரினால் தமது சுய விபரங்கள் உள்ளடங்கக்கூடிய வகையில், சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பமொன்றை 2013.03.11 ஆந் திகதிக்கு முன்னர் ஆளுநரின் செயலாளர், சப்பிரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகம், மாகாண சபைக் கட்டிடத்தொகுதி, புதிய நகரம், இரத்தினபுரி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலின் மூலம் அனுப்புவதன் ஊடாக இதற்காக விண்ணப்பிக்கலாம்.

தபாலின் மூலம் தொலைந்து போகும் விண்ணப்பங்கள் குறித்து இந்த நிறுவனம் எந்தப் பொறுப்பையும் ஏற்காது.

பந்துல ஏ. நாகசிங்க,
ஆளுநரின் செயலாளர்,
சப்பிரகமுவ மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
சப்பிரகமுவ மாகாணம்,
“மாகாண சபைக் கட்டிடத்தொகுதி”,
புதிய நகரம், இரத்தினபுரி.
2-607

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.